**தலைப்பு – 186 சீனி கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சீனி கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு

உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 267.3 மில்லியன் ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 229.0 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சேமிப்புக்கள் ரூபா 38.3 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 14.4 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 172.3 | 149.2 | 23.1 | 13.4 |
| மூலதனம் | 95.0 | 79.8 | 15.2 | 16.0 |
| மொத்தம் | **267.3** | **229.0** | **38.3** | **14.4** |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18601 | 2.0 | 1.5 | 0.1 | 2.3 | 7.0 | 3.5 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 272,059 ஆக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. தலைப்பு 186 – சீனி கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

04 செலவின விடயங்களுக்காக ரூபா 986,526 ஆன மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய நிதியேற்பாட்டில் 30 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

**3.2 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 1647(ஆ) | வாகனங்கள் மற்றும் வாகனங்களுடன் தொடர்பான உபகரணங்கள் பற்றிய கணிப்பீடொன்று மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரி சுற்றறிக்கை | |
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்கத் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2013 நவம்பர் 01 ஆந் திகதி முதல் 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை ஓராண்டு காலத்திற்காக அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் மதியுரையாளர் பதவிக்கு உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் அமைச்சரவை தீர்மானமொன்றில்லாமல் அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கு 2014 நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய இரண்டு மாதங்களுக்காக மொத்தம் ரூபா 196,940 வேதனம் செலுத்தப்பட்டிருந்தது. அம்மதியுரையாளருக்குரிய பணிப்பொறுப்பு மற்றும் அவரினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 9 | 5 | 4 |
| (ii) | மூன்றாம் நிலை | 1 | 1 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 22 | 12 | 10 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 14 | - |
| | மொத்தம் | 46 | 32 | 14 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.